80 - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்

கணிப்பீடு - 1

பகுதி I

மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

01. சாவிப் பலகையில் உள்ள சாவிகளின் எண்ணிக்கை

1. 102 2. 103 3. 104 – 108 4. 80 - 103

02. ECG பொறி எவ்வகைக் கணினியைச் சார்ந்தது

1. மீக்கணினி 2. இலக்கமுறை 3. கலப்பினக் கணினி 4. சிறுகணினி

03. முதல் மின்னியல் இலக்கக் கணினி எது

1. EDVAC 2. ENIAC 3. EDSAC 4. IBM 701

04. மையமுறைவழி அலகில் வெற்றிடக் குழாய்கள், திரான்சிஸ்ரர்களினதும் பின்னர் திரான்சிஸ்ரர்கள் ஒன்றிணைந்த சுற்றுக்களினாலும் பிரதியிடப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகள்.

1. முறைவழிப்படுத்தல் வலு, மின்நுகர்ச்சி ஆகிய இரண்டும் அதிகரித்தமை.
2. முறைவழிப்படுத்தல் வலு அதிகரித்ததும் மின்நுகர்ச்சி குறைவடைந்தமையும்.
3. முறைவழிப்படுத்தல் வலு குறைவடைந்ததும் மின்நுகர்ச்சி அதிகரித்தலும்
4. முறைவழிப்படுத்தல் வலு, மின்நுகர்ச்சி குறைவடைந்தமையும்

05. ஐந்தாம் தலைமுறைக் கணினிகளில் காணப்படும் இயல்பு

1. அளவில் பெரியது 2. வெப்பத்தின் அளவு அதிகம் 3. செலவு குறைவு 4. மின்நுகர்ச்சி அதிகம்

06. படிக்கணக்கிடலியை கண்டுபிடித்தவர் யார் ?

1. பிளேயிஸ் பஸ்கால் 2. கோட்பிரட் வில்லியம் 3. ஜோசப்ஜக்கவாட் 4. ஜோன் நேப்பியர்

07. உணரிகள் உள்ள வீதி விளக்குகள் எவ்வகைக் கணினியை சேர்ந்தது

1. இலக்கமுறை 2. மீக்கணினி 3. சிறுகணினி 4. ஒத்திசைக்கணினி

08. கணினிகளின் பரிணாம வளர்ச்சியில் வெற்றிடக்குழாய் திரிதடையத்தால் மாற்றீடு செய்யப்பட்டதோடு பின்பு திரிதடையம் ஒன்றிணைந்த சுற்றினால் மாற்றீடு செய்யப்பட்டது. இச் செயன்முறையில் கணினியின் ..... (அ) அதிகரித்ததோடு .....(ஆ) குறைவடைந்துள்ளது. அ, ஆ என்பவற்றிற்குப் பொருத்தமான பதங்கள் முறையே

1. வினைத்திறன், பௌதீக அளவு 2. வினைத்திறன், நம்பகத்தன்மை
3. பௌதீக அளவு, வினைத்திறன் 4. பௌதிக அளவு, செலவு

09. பின்வரும் எண்முறைமைகளில் எதில் எண் 8000 செல்லுபடியாகும்

1. பதின்மமும் பதினறுமமும் மாத்திரம் 2. பதின்மம் மாத்திரம்
3. பதின்மமும் எண்மமும் மாத்திரம் 4. எண்மம் மாத்திரம்

10. கணினியில் தரவுகளைத் தேக்கி வைப்பதற்கு பின்வரும் எவ் அமைப்பு பயன்படுகிறது.

1. துவிதம் 2. எண்மம் 3. பதினறுமம் 4. தசமம்

11. Mark – I எனும் எணிப்பானை உருவாக்கியவர் யார்

1. Howard Aiken 2. Lady Ada Lovelace 3. Charles babbage 4. Charles dicken

12. 2AD9 என்பதன் LSD, MSD முறையே

1. A,9 2. A,D 3. 2,9 4. 9,2

13. பின்வருவனவற்றில் வலிதான BCD குறிமுறை எது

1. 1111 2. 1100 3. 1001 4. 1011

14. சீன மொழியிலுள்ள எழுத்துக்களை எடுத்துக் காட்டப் பொருத்தமான குறிமுறை எது ?

1. ASCII 2. EBCDIC 3. Unicode 4. BCD

15. பின்வரும் தேக்க சாதனங்களை கதியின் அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்துக.

A – தற்போக்கு பெறுவழி நினைவகம் B - சிமிட்டும் நினைவகம்
C - இலக்க பல்திறவாற்றல் வட்டு D – பதுக்கு நினைவகம்

1. C,B,A,D 2. C,A,B,D 3. D,B,A,C 4. D,A,B,C

16. 4MB எத்தனை KB

1. 2^{10} 2. 2^{11} 3. 2^{12} 4. 2^{9}

17. நான்காம் தலைமுறைக் கணினிகளுக்கான உதாரணமாய் அமைவது

1. Honowell 6000 2. Intel Pentium 1 3. UNIVAC 1108 4. IBM 1620

18. பத்திரிகைகளில் பயன்படுத்தப்படும் நியமக் குறியீடு எது

1. QR 2. UNICODE 3. BARCODE 4. ISBN

19. 36_8 எனும் எண்முறைமைக்கு சமவலுவுடைய எண்முறைமை எது

1. 32_{10} 2. 011110_2 3. 110011_2 4. 18_{16}

20. PS/2 துறையில் ஊதா நிறம் கொண்ட துறையில் இணைக்கப்படும் சாதனம் எது ?

1. சாவிப்பலகை 2. சுட்டி 3. அச்சுப்பொறி 4. ஒலிபெருக்கி

21. நவீன கணினியின் தந்தை என அழைக்கப்படுபவர்

1. சார்ள்ஸ் பபேஜ் 2. பஸ்கால் 3. வொன் நியூமன் 4. அடா லவ்லேசா

22. கணினியில் விளையாட்டுக்கள் (Games) விளையாடுவதற்கு பயன்படுத்தப்படும் உள்ளீட்டு சாதனம் பின்வருவனவற்றுள் எது ?

1. சுட்டி 2. விசைப்பலகை 3. இயக்குப்பிடி 4. ஒளிப்பேனா

23. CD யின் கொள்ளவு யாது ?

1. 650 MB 2. 900 MB 3. 1.44 MB 4. 2 GB

24. உள்ளீட்டு சாதனமாகவும் வெளியீட்டு சாதனமாகவும் பயன்படுவது எது

1. தெரிவிப்பி 2. சுட்டி 3. தொடுதிரை 4. அச்சுப்பொறி

25. அனாவசிய நீர் நுகர்ச்சியைத் தவிர்ப்பதற்கு பயன்படுத்தப்படும் பொறி

1. தன்னியக்க முறையாக நீர் வழங்கும் பொறி
2. பயிரிடும் நிலத்தின் நிலமையை அளவிடும் பொறி
3. தன்னியக்க களையகற்றும் பொறி
4. ரோபோ

www.lkedu.lk

80 - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்

கணிப்பீடு – II

குறிப்பு: தங்கள் அப்பியாசக் கொப்பியில் இவ் ஒப்படையினை பிரதி செய்து விடுமுறை காலத்தில் பாடசாலை தொடங்கும் போது தங்கள் பாட ஆசிரியரிடம் ஒப்படைக்கவும்

01] *01.* தற்போது சந்தையில் காணப்படும் இரண்டு CPU உற்பத்தியாளர்களைக் குறிப்பிடுக ?

02. முதலாம் தலைமுறை தொடக்கம் நான்காம் தலைமுறை வரையான தொழினுட்பவியலைக் குறிப்பிடுக ?

03. முதலாம் தலைமுறையில் பயன்படுத்தப்பட்டுள்ள துளை அட்டையின் பயன்பாடு யாது ?

04. நான்காம் தலைமுறையில் பயன்படுத்தப்பட்ட மென்பொருள்கள் எவை ?

02] இணைக்குக.

01.	Mark I	வியாபாரங்களைப் பதிவு செய்தல்
02.	கூட்டற் பொறி	இதய நோய் திரையிடற் பொறி
03.	செயற்கை நுண்மதி	Blaise Pascal
04.	கதிமானி	விரல்கள், அட்டை வாசிப்பான்
05.	நிகழ்நிலை அங்காடி	முதலாம் தலைமுறை
06.	விரல் அடையாள அலகிடலி	மின்வர்த்தகம்
07.	இதயத்தின் தொழிற்பாடு	ஒத்திசைக் கணினி
08.	G2B	ஐந்தாம் தலைமுறை
09.	MRI	தரவு
10.	கணித பாட புள்ளி 70	உடலின் பகுதிகளை நுணுக்கமாக ஒளிப்படமாக்கல்

03] பின்வருவனவற்றுக்கு சிறுகுறிப்பு எழுதுக ?

01. ஆசிரியர் ஒருவர் தனது கற்பித்தல் நடவடிக்கைகளை தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தைப் பயன்படுத்தி மேம்படுத்தல்.

02. மருத்துவமனையில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தின் பங்களிப்பு.

03. மின்வங்கியல் தொகுப்பு

04. விவசாயத்துறையில் ரோபோத் தொழினுட்பத்தின் பயன்பாடு.

www.lkedu.lk